**தூப்புல் திருவேங்கடநாதன்** திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்து அனுபவித்த பிரகாரத்தைப் பின்வரும் விருத்தப் பாக்கள் நன்கு காட்டுகின்றன.

பத்திரா லம்பனம் பண்ணி வந்த
பண்டிதன் கண்டித மடைந்து
பணிந்துபின் பேக அரங்கநாய கரும்
பரிவொடு பேர்தரக் கிருபை
வைத்துநீ ருபயவேத நூல்க ளையும்
வியாக்கியா னம்புரிந் திங்கே
வசியுமென் றதையே சிரமதாய்ப் பெரிய
வாச்சான்பிள் ளையைமு தலாயச்
சுற்றிய சுருதப்பி ரகாசிகா பட்டர்
சுதரிசனா சார்ய ரிவர்கள்
துதிசெய நிகமாந்தப் பிரவ சனந்
தொடர்ந்திருந் தங்குளோர் புகழ
உற்றிடு வாதிபஞ் சானன னெனவே
யுபயகா வேரிரங் கத்தி
லுபயர்தா முஞ்செ யுபயநா மங்க
ளுபயவே தாந்ததே சிகனே.

திருவரங்கங் கோயில்வாழ்ந் திருந்திவர் கெடி
செலுத்திவரு காலத்தி லோர்
தினமிரவி லெதிவரரு மிவர்சொப் பனத்திற்
சிறந்தெழுந் தருளி வந்து
திருவடியை யிவர்சிரசில் வைத்துப் பதித்துநீர்
தெளிந்துநம் பாஷ்ய மதனைச்
செகத்திற் பிரவர்த்திக்கைசெய்தும்பிர பந்தங்கள்
திரளாக வுதவு மென்னக்
கருணைபெற வேகொண்டு திருவேணு தாரியிவர்
கண்ணனொரு வேணு வென்றே
கருத்தொத்த பத்தியாய்ச் சாரீர கத்தைவெளி
கண்டுதிரு வோலக்கமேல்
தருகருணை பாடிடப் பெற்றுந மிராமாநு
ஜன்பாஷ் யந்தொ டங்குஞ்
சருவப்பிர பந்தகுரு வுறுதியெங் குருசர்வ
தந்திர சுதந்திர குருவே.

நுவலுதிரு வோலக்கந் தனிலே ராமா
நுஜபாஷ்யந் தொடங்கிப்பிர சங்கஞ்செய்த

இவரே**வே தாந்தாசா ரியரா மெ**ன்று
மெம்பெருமா னுகந்துதிருப் பேரைச்சாற்றத்

தவறாமற் சீரங்க நாச்சி யாருஞ்
**சர்வதந்த்ர சுதந்த்ரரென்று** சாற்றக்கொண்டு

குவலயத்திற் பரமதநி ரசன மாகக்
கூட்டினார் பிரபந்தநிலை நாட்டினாரே

தருபுகழ்**வே தாந்தாசா ரியரா** யிங்கே
**சருவதந்திர சுதந்திரப்பேர்** தனியே பெற்று

**வருகவிதார்க் கிகசிங்க** ரென்னு நாம
வைபவத்தை யுடையவராய் வளருந் தூப்புல்

திருவேங்க டம்முடையா னிவர்தா மந்தச்
சீரங்க நகரில்வாழ்ந் திருக்கு நாளில்